பல கிராமங்களில் குடி நீர்ப் பஞ்சமும் ஏற்பட்டுள்ளது. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் ஆகியவற்றிடம் உள்ள நிதியைக் கொண்டு குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துமாறு கலெக்டர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

மாவட்டம் முழுவதிலும் உள்ள பருவ நிலைமை குறித்து கலெக்டர் இன்னும் மதிப்பீடு செய்யவில்லை. மதிப்பீடு செய்து முடித்ததும் குறிப்பான செயற்குறிப்புகளை அனுப்பி வைப்பதாக கலெக்டர் உறுதி கூறியுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மற்றொரு கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. எஸ். ராமசாமி நாயுடு அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், பேரவையின் அனுமதியுடன் அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

5. அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனும்கள் (துணை) திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனும்கள் (துணை) திருத்த மசோதாவை அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனும்கள் (துணை) திருத்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

6. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

கோரிக்கை எண் 17—மீனளம்

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ.1,21,53,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

Dr. H. V. HANDE : Sir, to discuss policy—I move the following cut motion :—

'That the allotment of Rs. 1,21,53,800 under Demand No. 17—Fisheries be reduced by Rs. 100.'

Thiru K. RAMAMOORTHY : Sir to discuss policy with special reference to the improvements to the Cuddalore Port—I move the following cut motion :—

'That the allotment of Rs. 1,21,53,800 under Demand No. 17—Fisheries be reduced by Rs. 100.'